**செய்தி வெளியீடு எண்: 361** **நாள்: 05.06.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் 1 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – பாலவாக்கம், கிருஷ்ணகிரி மாவட்டம் – காளிக்கோயில் ஆகிய இடங்களில் 3 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான போக்குவரத்துத் துறையின் 2 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 25.9.2015 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘மாவட்ட தலைநகருக்கு இணையாக சில மாவட்டங்களின் இதர பகுதிகளிலும், மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை ஆகியன அதிகரித்துள்ளதன் காரணமாக, அப்பகுதியிலுள்ள மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போன்ற பணிகளுக்கு நெடுந்தூரத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் ஏற்படும் கால விரயத்தை தவிர்த்து பொதுமக்களும், வாகன உரிமையாளர்களும் பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில் திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் 1 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டின் எல்லையில் அண்டை மாநிலங்களிலிருந்து நுழையும் வாகனங்களை தணிக்கை செய்யும் பணிகளை மேற்கொள்ளவும், மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை மீறும் வாகனங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வகையிலும், திருவள்ளூர் மாவட்டம் – பாலவாக்கம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் – காளிக்கோயில் ஆகிய இடங்களில் 3 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான போக்குவரத்துத் துறையின் 2 சோதனைச் சாவடிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு.சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.6.2018**